தினமணி 06/05/2022

# அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் பிறந்த நாள் விழா




விழாவில் பேசிய கோவை ஸ்ரீலலிதாம்பிகா அறக்கட்டளை நிறுவனர் சுவாமி ஸ்ரீ ஜகதாத்மானந்த சரஸ்வதி.

**கோவை, மே 5:** அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் தி.சு. அவினாசிலிங்கத்தின் 119ஆவது பிறந்த நாள் விழா கல்லூரி வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை சார்பாக அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஸ்ரீ அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் தி.ச.க. மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் வேந்தர் பேராசிரியர் ச.ப.தியாகராஜன் வாழ்த்துரை வழங்கினார். அவினாசிலிங்கம் பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் மற்றும் வாழ்நாள் அறங்காவலர் க.குழந்தைவேல் பாராட்டுரை வழங்கினார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மற்றும் சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில், ஜாதி, மத பேதமற்ற கல்வியை அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக ராமகிருஷ்ண மிஷன் மற்றும் சாரதாலயம் எனும் நிறுவனங்களை உருவாக்கி கிராமப்புற மக்களும் கல்வி பெற வித்திட்டு வழிவகை செய்தவர் அவினாசிலிங்கம் என்றார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக கோவை ஸ்ரீலலிதாம்பிகா அறக்கட்டளை நிறுவனர் சுவாமி ஸ்ரீ ஜகதாத்மானந்த சரஸ்வதி அவர்களின் 'வாழ்வியல் மதிப்பீட்டுக் கல்வி' என்னும் நூலை பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து ஸ்ரீலலிதாம்பிகா அறக்கட்டளை நிறுவனர் சுவாமி ஸ்ரீ ஜகதாத்மானந்த சரஸ்வதி பேசுகையில், கல்வியின் மூலம் அறிவு தாகம், பௌதீக தாகம், ஆன்மிக தாகம் நிறைவு செய்யப்படுகிறது. எனவே அவினாசிலிங்கம், ஏழை மாணவர்களுக்கு இம்மூன்று தேவைகளையும் நிறைவு செய்வதற்குக் கட்டணமில்லா கல்வி அளித்தார்.

அவினாசிலிங்கம் உண்மையான தமிழ் மொழிப்பற்றுக் கொண்டவர். ஒரு மொழியை நிலைநிறுத்துவதற்கு பிற மொழிகளை வெறுப்பது உண்மையான மொழிப்பற்று அல்ல. மொழிப்பற்றையும் தெய்வீகப் பற்றையும் தமது இரு கண்களாகக் கொண்டவர் அவினாசிலிங்கம் என்றார்.